**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 116** **நாள்: 03.06.2025**

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் கோடம்பாக்கம் மண்டலம், வடபழனி, அம்மன் கோவில் தெருவில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடல் மற்றும் சிறுவர் விளையாட்டு பூங்காவினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (03.06.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-130, வடபழனி, அம்மன் கோவில் தெரு, சிம்ஸ் மருத்துவமனை அருகில் தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடல் மற்றும் சிறுவர் விளையாட்டு பூங்காவினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

2010 ச.மீ. பரப்பளவு கொண்ட திறந்தவெளி நிலமானது விளையாட்டுத் திடலாக மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த விளையாட்டுத் திடலில், கபடி விளையாட்டு மைதானம், வலைப்பயிற்சியுடன் கூடிய கிரிக்கெட் விளையாட்டு மைதானம், இறகுப்பந்து மைதானம், திறந்தவெளி உடற்பயிற்சி சாதனங்கள், சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், சதுரங்கம் மற்றும் கேரம் விளையாட்டிற்கான உள் அரங்கம், பூச்செடிகள், நடைபாதை, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான இரண்டு கழிப்பறைகள் உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஜெ.கருணாநிதி (தியாகராயநகர்),திரு.த. வேலு (மயிலாப்பூர்), மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர்கள் திரு.சு.பாஸ்கர், திரு.கே. ஏழுமலை, திருமதி.ஆர். ரத்னா லோகேஸ்வரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**